செ.வெ.எண்: 229 நாள்: 28.03.2019

**பாராளுமன்ற தேர்தலையொட்டி சிவகங்கை பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் பொது பார்வையாளர் திரு.ஹர்பிரீத் சிங்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

---

பாராளுமன்ற தேர்தலையொட்டி சிவகங்கை பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் பொது பார்வையாளர் திரு.ஹர்பிரீத் சிங்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (28.03.2019) மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிவகங்கை பாராளுமன்ற தேர்தல் பொது பார்வையாளர் திரு.ஹர்பிரீத் சிங்,இ.ஆ.ப., அவர்கள் சிவகங்கை பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருமயம் மற்றும் ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் உள்ள வாக்குச்சாவடிகளில் பணிபுரியும் அலுவலர்கள் தேர்தல் ஆணையத்தால் வகுக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் வாக்குப்பதிவின் போது மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்து எடுத்துரைத்தார்கள்.

மேலும் வாக்குச்சாவடி மையத்தில் வாக்காளர்களுக்கு வாக்குப்பதிவு நாளன்று மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் தேவையான அளவு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்தார்கள். குறிப்பாக வாக்குப்பதிவு தொடங்கியது முதல் வாக்குப்பதிவு முடிவுற்று மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சம்மந்தப்பட்ட வாக்கு எண்ணும் மையயங்களில் பாதுகாப்பாக கொண்டு சேர்க்கும் வரை கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்து தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு எடுத்துரைத்தார்.

பாராளுமன்ற தேர்தலையொட்டி மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கைகள், பாதுகாப்பு, வாகன வசதிகள், பணியாளர்கள், உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ச.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.ராதாஜெயலெட்சுமி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**